## நான் இங்கு எவ்வளவு காலம் இருப்பேன்?

உங்களுக்கு தேவைப்படும் சிகிச்சையை அளிப்பதற்கு ஏதுவாக, முதலில் ஆறு மாதங்கள் வரை நீங்கள் இங்கு வைக்கப்படலாம்.

உங்களுடைய பராமரிப்பிற்கு பொறுப்பேற்றுள்ள நபர் (உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர்) நிங்கள் செல்லலாம் என்று கூறினாலன்றி, இக்காலகட்டத்தில் நீங்கள் மருத்துவமனையைவிட்டு வெளியேறக்கூடாது. நீங்கள் வெளியேற முயற்சித்தால், பணியாளர்களால் தடுத்து நிறுத்தப்படக்கூடும், மற்றும் அதையும் மீறி சென்றால், நீங்கள் திரும்பவும் அழைத்துவரப்படலாம்.

## அடுத்ததாக என்ன நடக்கும்?

மருத்துவமனையிலிருந்து நீங்கள் வீடு செல்லும் அளவிற்கு நீங்கள் நலமுடன் இருப்பதாக உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவர் கருதும்போது அதை அவர் உங்களுக்குக் கூறுவார். ஆறு மாதங்களுக்கும் அதிகமாக நீங்கள் மருத்துவமனையிலேயே இருக்க வேண்டும் என்று உங்களுக்குப் பொறுப்பேற்றுள்ள மருத்துவர் கருதுவாரானால், இன்னும் ஆறு மாதங்கள் வரை, மற்றும் அதன்பின் ஒரே நேரத்தில் ஓராண்டு வரை எவ்வளவு காலம் உங்களை மருத்துவமனையில் வைத்திருக்க வேண்டும் என்பதை அவர் புதுப்பித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு காலகட்டத்தின் முடிவிலும் உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவர் இது குறித்து உங்களிடம் பேசுவார்.

